**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை**
**STP9619– கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

0046

**திகதி:- 07.02.2026** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30**

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. "வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவை மாணவர்களின் விருத்தி மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றுக்கு அவசியமான ஒரு விருத்திசார் செயல்முறையாகும் (Developmental Process)."

   i. பொருத்தமான ஒரு வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி, வழிகாட்டல் ஆலோசனை சேவை ஏன் இயல்பிலேயே விருத்திசார் செயன்முறையாக கருதப்படுகின்றன என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

   ii. ஆலோசனை சார் செயன்முறை மனித விருத்தியின் முக்கிய பகுதிகளைக் கையாள்கிறது. அத்தகைய **மூன்று (03)** பகுதிகளைக் குறிப்பிட்டு, பொருத்தமான உதாரணத்துடன் ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக. **(09 புள்ளிகள்)**

   iii. கல்வி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவை, மாணவர்களின் முழு விருத்திக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்கின்றன. உங்கள் விடைக்கு ஆதரவாக **மூன்று (03)** பொருத்தமான உதாரணங்களை வழங்கி, இந்தக் கூற்றை நியாயப்படுத்துக. **(12 புள்ளிகள்)**

2. "வினைத்திறன்மிக்க ஆலோசனை நடைமுறைகளுக்கு சிகிச்சை சார் அணுகுமுறைகள் (Therapeutic Approaches) பயனுள்ள சிறப்பான ஒரு கட்டமைப்பாகும்."

   i. ஆலோசனை சேவையிலுள்ள ஒரு சிகிச்சை சார் அணுகுமுறையைச் (Therapeutic Approach) சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

   ii. பின்வரும் சிகிச்சை அணுகுமுறைகளின் அடிப்படைக் கொள்கைகளைக் குறிப்பிடுக.
   அ. உளப்பகுப்பாய்வு அணுகுமுறை (The Psychoanalytic Approach)
   ஆ. தனியாள் அணுகுமுறை (The Person - Centered Approach)
   இ. நடத்தையியல் அணுகுமுறை (The Behavioral Approach) **(09 புள்ளிகள்)**

   iii. மேலே கலந்துரையாடிய சிகிச்சை சார் அணுகுமுறைகளில் **ஒன்றைத் (01)** தேர்ந்தெடுத்து, பொதுவாக மாணவர்கள் எதிர் கொள்ளும் உளவியல் சார் பிரச்சினைகளுக்கு ஒரு ஆலோசகர் அதன் நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பரீட்சிக்குக. உங்கள் விளக்கத்தை தெளிவுபடுத்த ஒரு உதாரணத்தைத் தரவும். **(11 புள்ளிகள்)**

3. "மாணவர்களிடையே கல்விசார் மன அழுத்தம், சகபாடிகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகப் பதிவாகியுள்ளதையடுத்து, ஒரு இடைநிலைப் பாடசாலை சமீபத்தில் தனது ஆலோசனைச் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது. திருமதி. ஜெயானி, புதிதாக நியமிக்கப்பட்ட பாடசாலை ஆலோசகர் உணர்ச்சிபூர்வமான தகவல்கள், இரகசிய தகவல்கள் மற்றும் ஆசிரியர்களின் பரிந்துரைகள் போன்ற முக்கியமான விடயங்களை நம்பகத்தன்மையுடன் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ளவர். இருப்பினும், பாடசாலையில் அதன் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்திற்கான முறையான நெறிமுறைக் கோவை (Code of Ethics) ஒன்று தயாரிக்கப்பட்ட நிலையிலும் இல்லை, அவர்களிடையே வெவ்வேறு ஆசிரியர்கள், திருமதி. ஜெயானியிடம் மாணவர் தகவல்களைத் தடையின்றிப் பகிர்ந்துகொள்ள எதிர்பார்கிறார்கள். பெற்றோர் இரகசியமான விவரங்களை வெளிப்படுத்துமாறு அவரிடம் அழுத்தம் கொடுக்கிறார்கள், மேலும் நிர்வாகம் சில மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு விரும்புகிறது. வரையறைகள் மற்றும் தொழில்முறைப் பொறுப்புக்கள் குறித்து நிச்சயமற்ற உணர்வுடன் திருமதி. ஜெயானி பாடசாலைக்குள் முறையான வழிகாட்டல் ஆலோசனைக்கான நெறிமுறைக் கோவையொன்றினை அறிமுகப்படுத்தும் பணியொன்றினை ஆரம்பிக்கிறார்."

i. மேற்கூறிய சூழ்நிலையின் அடிப்படையில், பாடசாலையில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் திறம்பட ஒரு நெறிமுறைக் கோவை ஏன் இன்றியமையாதது என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. நம்பகத்தன்மை, ஆசிரியர் எதிர்பார்ப்பு மற்றும் பெற்றோரின் அழுத்தங்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் திருமதி. ஜெயானி நெறிமுறை கோவையொன்றினை கடைப்பிடித்தல் திருமதி. ஜெயானிக்கு எவ்வகையில் உதவுகின்றது என்பதை பகுப்பாய்வு செய்க. பொருத்தமான நெறிமுறைகளைக் கொண்டு உங்கள் விடையைக் கலந்துரையாடுக. **(09 புள்ளிகள்)**

iii. ஆலோசனைச் சேவைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட நெறிமுறைக் கோவை இல்லாமல் பாடசாலை தொடர்ந்து இயங்கினால், அதனால் பின்வருவோருக்கு ஏற்படக்கூடிய முக்கிய பின்விளைவுகளைக் குறிப்பிடுக.
அ. மாணவர்கள்
ஆ. ஆலோசகர்
இ. பாடசாலைக் கட்டமைப்பு **(12 புள்ளிகள்)**

4. "தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் கோட்பாடுகளைப் (Vocational and Career Guidance Theories) புரிந்து கொள்வது, மாணவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்து தகவலறிந்து முடிவுகளை எடுக்க உதவுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது."

i. தொழில் / வேலைவாய்ப்பு ஆலோசனையின் **இரண்டு (02)** முக்கிய கோட்பாடுகளைப் பெயரிட்டு, அவற்றின் அடிப்படைக் கொள்கைகளை ஒப்பிடுக. **(06 புள்ளிகள்)**

ii. மேலே உம்மால் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளில் **ஒன்றைத் (01)** தேர்ந்தெடுத்து, மாணவர்கள் பொருத்தமான மற்றும், யதார்த்தமான தொழில் தேர்வுகளை மேற்கொள்ள உதவும் வகையில் அதன் அடிப்படைக் கொள்கைகளை ஒரு ஆசிரியராக உங்களது வகிபாகமாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடுக. **(09 புள்ளிகள்)**

iii. இலங்கை பாடசாலைகளில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் சேவைகளின் தற்போதைய நடைமுறைகள் மற்றும் சவால்களை, தற்போதைய பாடசாலை உண்மை நிலவரங்களில் இருந்து **இரண்டு (02)** உதாரணங்களைக் குறிப்பிட்டு, விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க. **(10 புள்ளிகள்)**

5. "இலங்கை விரைவான சமூக, பொருளாதார மற்றும் கல்வி மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. கல்வி அமைச்சு மற்றும், பிற முகவர் நிலையங்கள் இந்தச் சவால்களை எதிர்கொள்வதில் இளைஞர்களுக்கு ஆதரவளிப்பதற்காகப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூக நிலையங்களில் பல்வேறு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.
ஒரு கல்வி ஆய்வாளராகவும், செயற்பாட்டாளராகவும், நீங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் விகிபாகம் மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்யவும், நாடு முழுவதும் உள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்காக மேம்பாடுகளை முன்மொழியவும் பணிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுங்கள்."

i. சமூக, கல்வி, பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, தற்போது இலங்கையில் உள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் **நான்கு (04)** முக்கிய சவால்களைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. மேலே உங்களால் அடையாளம் காணப்பட்ட சவால்களை எதிர்கொள்வதில் மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் நடைமுறை வழிகளைப் பாடசாலை அல்லது பல்கலைக்கழக வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடுக. **(09 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்தை கலந்துரையாடுவதுடன் அந்நிகழ்ச்சித்திட்டத்தினை பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்க.

அ. அதன் நோக்கங்கள்

ஆ. முக்கிய அம்சங்கள்

இ. பாடசாலை மாணவர்கள், கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் வேலையில்லாத இளைஞர்களின் தேவைகளை அது எவ்வளவு திறம்படப் பூர்த்தி செய்கிறது.

பொருத்தமான இடங்களில் உதாரணங்களுடன் உங்கள் கலந்துரையாடலை முன்வைக்குக.

**(12 புள்ளிகள்)**

**6.** "சுனில் என்பவர் இலங்கையில் ஒரு இடைநிலைப் பாடசாலையில் ஆலோசகராக பணியாற்றி வருகிறார். கடந்த ஒரு வருடமாக, அவர் கற்றல் இடர்பாடு, கற்கும் சிரமங்கள், உடல் குறைபாடுகள் மற்றும் மனவெழுச்சி / நடத்தை சவால்கள் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை கவனித்துள்ளார். இந்த மாணவர்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் ஆதரவளிப்பது என்பதில் பல ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் நிச்சயமற்ற நிலையில் உள்ளனர். மேலும் பாடசாலை ஆலோசகரின் வகிபாகத்திற்கும் விசேட கல்விப் பிரிவுகளின் வகிபாகத்திற்கும் இடையே குழப்பம் நிலவுகிறது. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவளிக்கவும், அவர்களின் உரிமைகளுக்காக வாதிடவும், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் நிபுணர்களுடன் திறம்பட ஒத்துழைக்கவும் ஒரு விரிவான ஆலோசனைத் திட்டத்தை உருவாக்க சுனில் நோக்கம் கொண்டுள்ளார்."

**i.** "விசேட கல்வித் தேவைகள்" (Special educational needs) என்ற பதத்தை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஆலோசனைத் திட்டங்கள் எவ்வாறு உள்ளடங்கலை (Inclusion) மேம்படுத்தலாம், மற்றும் விசேட கல்வித் தேவைகள் உள்ள பாடசாலை மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கலாம் என்பதை விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

**(09 புள்ளிகள்)**

**iii.** விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கான ஆலோசனைத் திட்டங்களைச் செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் **மூன்று (03)** நடைமுறைச் சவால்களை அடையாளம் கண்டு, இந்தச் சவால்களைச் சமாளிப்பதற்கான **மூன்று (03)** உத்திகளைப் பரிந்துரைக்குக.

**(12 புள்ளிகள்)**

- *பதிப்புரிமை பெற்றது* -